# தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

**மானியக் கோரிக்கை எண் 27**

தொழில்கள்

**2011 – 2012**

**எஸ்.பி. வேலுமணி**

**தொழில் துறை அமைச்சர்**

©

**தமிழ்நாடு அரசு**

**2011**

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2011 – 2012

## பொருளடக்கம்



| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–7 |
| 1. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 8–23 |
| 2. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 24–38 |
| 3. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 39–43 |
| 4. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 44–48 |
| 5. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 49–54 |
| 6. | தமிழ்நாடு கனிம நிறுவனம் | 55–58 |
| 7. | தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் | 59 |
| 8. | தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் | 60–62 |
| 9. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 63–66 |
| 10. | தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் | 67–69 |
| 11. | புவியியல் மற்றும் சுரங்கத்துறை | 70–79 |
| 12. | சர்க்கரைத் தொழில் | 80–86 |

# தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2011–12

## முன்னுரை

தொழில்மயமாக்கலில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக பல ஆண்டுகளாக திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, பொறியியல், மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, தோல், சர்க்கரை முதலான உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. 1991ஆம் ஆண்டில் தாராளமயமாக்குதல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தக் கால கட்டத்திலிருந்து, நாட்டின் தொழில் வளர்ச்சியை நிர்ணயிப்பதில், தனியார் துறையின் பங்கு அதிகரிக்க ஆரம்பித்தது. தனியார் முதலீட்டை ஈர்ப்பதில் மாநிலங்களிடையே போட்டி உருவானபொழுது தமிழ்நாடு அரசு 1992ஆம் ஆண்டிலேயே தொழில் கொள்கை ஒன்றினை வெளியிட்டு இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டது. இந்த தொழில் கொள்கைதான் மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகள் விரைவாக உருவாவதற்கு அடித்தளமாக அமைந்தது. தமிழ்நாட்டில் மின்னணு மற்றும் மோட்டார் வாகனத் தொழிற்புரட்சிக்கு இத்தொழில் கொள்கை வழிவகுத்தது. தொழில் வளர்ச்சியினை மாநிலத்தில் துரிதமாக்கியது; பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து பெருந்திட்டங்களை ஈர்ப்பதற்கு வழிவகுத்தது. இப்பெருந்திட்டங்களைச் சார்ந்து உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிக அளவில் உருவாகும் சூழ்நிலை உண்டானது.

### அரசின் கொள்கை

**“உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சியில் அதிகமான தனியார் மற்றும் பொதுத்துறை முதலீட்டை ஈர்க்க வேண்டும்; தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை அடைந்து, அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும்”** என்பது அரசின் கொள்கையாகும்.

### தமிழ்நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை:

பொருளாதாரத்தில் இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு ஐந்தாவது பெரிய மாநிலமாக

மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில உள்நாட்டு மொத்த உற்பத்தியில், 27.39 விழுக்காடு தொழில் உற்பத்தி (Secondary Sector) துறைகளில் இருந்து பெறப்படுகிறது. 2008–09ஆம் ஆண்டில், தமிழ்நாடு 26,122 தொழிற்சாலைகளுடன் ரூ.3,00,801 கோடி அளவிலான தொழில் உற்பத்தி மதிப்புடன் விளங்கியது. *(ஆதாரம்– இந்திய அரசின் தொழில் ஆண்டறிக்கை)*

2005–06ஆம் ஆண்டில் இருந்த தமிழ்நாட்டின் துரித வளர்ச்சி விகிதம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சற்று சரிவினைச் சந்தித்துள்ளது:

| | 2005 – 06 | 2009–10 |
|---|---|---|
| | (விழுக்காட்டில்) | |
| மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் (GDP Growth Rate) | 13.3 | 8.96 (மு.ம.)** |
| தொழில் துறை (Secondary Sector) | 12 | 8.8 (மு.ம.)** |
| உற்பத்தி துணைத் துறை (Manufacturing Sub-sector) | 14.6 | 11.1 |

(** மு.ம. – முன்கூட்டிய மதிப்பீடு)

தமிழ்நாட்டில், மீண்டும் நீண்டகாலத்திற்கு நீடித்திருக்கும் வளர்ச்சியினை உருவாக்கி, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுமே பயனடையச் செய்ய



வேண்டுமென்பது அரசின் தொலைநோக்குப் பார்வையாகும்.

2011 ஜூன் திங்கள் ஆளுநர் உரையில் தொழில் வளர்ச்சிக்கு அரசு அளிக்கும் முக்கியத்துவம் குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது :

“இந்த அரசு முக்கியத் தொழில்களான மோட்டார் வாகன உற்பத்தி, மோட்டார் வாகன உதிரி பாகங்கள், தகவல் தொழில்நுட்பம், கணினி சார்ந்த சேவைகள், ஜவுளித் துறை, தோல் பொருட்கள் சார்ந்த தொழில் துறை, பொறியியல் உபகரணங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்ய பெரிய தொழில் நிறுவனங்களை ஈர்க்க முயற்சி செய்யும். புதிதாக வளர்ச்சி பெற்று வரும் துறைகளான உயிரி தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம் மற்றும் மருந்தியல் போன்ற துறைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு செயல்படும்”.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கென “தொலைநோக்கு திட்டம் 2025” என்ற கொள்கை ஆவணம் ஒன்றினை மாநில அரசு விரைவில் வெளியிடும் என்று அண்மையில் அறிவித்துள்ளார். மாநிலத்தில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கு, தேவையான

உட்கட்டமைப்பினை உருவாக்கி முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி இந்த நீண்ட கால இலக்கினை அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்திய அளவில், முதல் இடத்தினை அடையும் நோக்குடன், தமிழ்நாடு அரசு நடைமுறைக்கு உகந்த மற்றும் தொலைநோக்கு பார்வை கொண்ட தொழில் கொள்கை ஒன்றினை 2003ஆம் ஆண்டு வெளியிட்டது. இக்கொள்கை, மாநிலத்தில் அதிக அளவில் வெளிநாடு மற்றும் உள்நாட்டு முதலீடுகளை ஈர்த்து அதன் வாயிலாக தமிழ்நாட்டில் மின்னணு புரட்சிக்கு அடிகோலியது. மின்னணு பொருட்கள் மற்றும் மோட்டார் வாகன உற்பத்தியில் உலகின் பெரிய அளவிலான மையங்களில் ஒன்றாக சென்னை உருவாகியுள்ளது. தொழில்மயமாக்கலில் வளர்ந்து வரும் உலகளாவிய போக்கினை உணர்ந்து, ஆளுநர் உரையில் தெரிவித்த அரசின் நோக்கங்களை அடைவதற்கு, உயிரி தொழில்நுட்பம், மருந்தியல், மோட்டார் வாகனம் மற்றும் உதிரி பாகங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலான துறைகளுக்கென்று தனித்தனி கொள்கைகள் வகுக்கப்படும்.



**புதிய தொழில் கொள்கை வகுத்தல்**

கடந்த சில ஆண்டுகளில், விரைவாக வளர்ந்து வரும் சில மாநிலங்கள், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு தாராளமய முதலீட்டுக் கொள்கைகளை வகுத்துள்ளன. இத்தகைய போட்டி மிகுந்த சூழலில் தொழில்மயமாக்கலில் முதலிடத்தினை மீண்டும் அடைவதற்கும் வளர்ச்சி வேகத்தை துரிதப்படுத்துவதற்கும், விரிவான புதிய தொழிற்கொள்கை ஒன்று வெளியிடப்படும்.

தொழில்மயமாக்கத்திற்கு நில எடுப்பு அடிப்படைத் தேவையாக இருப்பதால், நில உடைமைதாரர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் ஆகிய இருவருக்குமே பயனளிக்கும் வகையில் ‘புதிய நிலக் கொள்கை’ ஒன்று உருவாக்கப்படும்.

**உட்கட்டமைப்பு திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்**

தொழில் வளர்ச்சி என்பது ஒரு மாநிலத்தில் உள்ள உட்கட்டமைப்பின் பரவல் மற்றும் அதன் தரத்தினைச் சார்ந்துள்ளது. எதிர்காலத்தில் எழக்கூடிய

உட்கட்டமைப்பின் தேவையினைக் கருத்தில் கொண்டும், உட்கட்டமைப்பில் தனியார் முதலீடுகளை கவரும் வகையிலும் எதிர்காலத் திட்டங்களை வகுக்க ஒரு ‘‘தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்’’ (Tamil Nadu Infrastructure Development Board) ஏற்படுத்தப்படும்.

**வளர்ச்சியினை பரவலாக்குதல்**

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதன் அவசியத்தை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனை நிறைவேற்ற, அம்மாவட்டங்களில் தொழில் பெருவழிச்சாலைகளை (Industrial Corridors) உருவாக்கி அதன்மூலம் புதிய உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தி அப்பகுதிகளுக்கென்று சிறப்புத் தொகுப்பு சலுகைகள் அளிக்கப்படும்.

நிறைவாக, ஒரு பல்பரிமாண அணுகுமுறையாலும், அதே சமயத்தில் சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களின் விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுவதன் வாயிலாகவும், இந்தியாவின் தொழில் வரைபடத்தில் தமிழகம் ஓர் உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லப்படும்.



## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965ஆம் ஆண்டு பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளைத் தனியார் தொழில் முனைவோருடன் கூட்டுச் சேர்ந்து மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதன் வரைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகும். டிட்கோவின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 125 கோடி. அதில் ரூ.72 கோடி தமிழக அரசின் பங்களித்த முதலீடாக உள்ளது.

டிட்கோவின் விரிவான பல திட்டங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட இரும்பு மற்றும் எஃகு, இரசாயன உரங்கள், இரசாயனப் பொருட்கள், பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள், பொறியியல் மற்றும் மோட்டார் வாகனப் பொருட்கள், வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல், தோல், ஜவுளி மற்றும் மருந்து பொருட்கள், மலர்ச்செடி வளர்ப்பு, தோட்டக்கலைப் பயிர் வளர்ப்பு போன்ற தொழில்களும், மின்னணு மற்றும் தகவல் தொடர்பு, தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், அடிப்படைக்

கட்டமைப்பு வசதிகள், தொழிற் பூங்காக்கள் போன்றவைகளும் அடங்கும்.

டிட்கோ நிறுவனத்திற்கான முதலீட்டு மதிப்புத் தொகை ரூ.330 கோடி, பெரும்பாலும் பங்கு முதலீடுகளாக, கூட்டு நிறுவனங்களின் நடப்பு திட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. டைட்டன் இன்டஸ்டிரீஸ், தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ், டைடல் பூங்கா, டைசல் பயோபார்க், மகிந்திரா வோல்டு சிட்டி, அசெண்டாஸ் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, தகவல் தொழில்நுட்ப அதிவிரைவு சாலை மற்றும் சென்னை வர்த்தக மையம் போன்ற தொழில் மற்றும் கட்டுமானத் திட்டங்கள் டிட்கோ கையாண்டதில் பங்கு வகித்த முக்கிய நிறுவனங்களில் சிலவாகும்.

டிட்கோ, தரமணியில், டைடல் II மற்றும் IIIஇல் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்பு பொருளாதார மண்டலம், திருவள்ளூர் மாவட்டத்தில் கப்பல் கட்டும் தளம் மற்றும் சிறுதுறைமுக வளாகம், நாங்குனேரியில் பல்பொருள் தயாரிப்புக்கான சிறப்பு பொருளாதார மண்டலம் ஆகிய திட்டங்களைச்



செயல்படுத்தி வருகிறது. மேலும் டிட்கோ எண்ணூர், பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பல்பொருள் தயாரிப்புக்கான சிறப்பு பொருளாதார மண்டலங்களை செயல்படுத்தத் திட்டமிட்டு வருகிறது. அரசின் வேண்டுகோளுக்கிணங்க டிட்கோ நிறுவனம், நிதிநகரம் மற்றும் ஊடகம்–பொழுதுபோக்கு பூங்கா, வானூர்தி தொழிற் பூங்கா, திரவநிலை இயற்கை எரிவாயு இறக்குமதி முனையம், இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் பணி, விளையாட்டு நகரம், கோல்ப் மைதானம், உணவு பதப்படுத்துவதற்கான சிறப்பு பொருளாதார மண்டலம், உயிரி தொழில்நுட்ப உபகரண மையம், சென்னை வர்த்தக மைய விரிவாக்கம் ஆகிய திட்டங்களைச் செயலாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திட்டங்கள்**

**பெட்ரோலியம், இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதிக்கான திட்டம்**

மத்திய அரசு பெட்ரோலியம், இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் உற்பத்தித் துறையில் பெரிய அளவில் முதலீட்டுப் பகுதிகளை

உருவாக்க ஒரு திட்டக் கொள்கையை அறிவித்தது. அதன்படி தமிழ்நாடு அரசு கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இத்திட்டத்தினை அமல்படுத்த ஒரு விரிவான அறிக்கையை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. மத்திய அரசின் உயர்மட்டக் குழு மத்திய அமைச்சரவை செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் இத்திட்டத்தை அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய அமைச்சரவையின் பொருளாதாரக்குழுவின் ஒப்புதல் பெற்றபின், இத்திட்டத்தை மத்திய அரசு முறையாக அறிவிக்கும்.

**நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை திட்டம்**

ஆண்டொன்றுக்கு 6 மில்லியன் டன்கள் திறன் கொண்ட ஒரு பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை திட்டத்தை சுமார் ரூ.7,160 கோடி முதலீட்டில் கடலூர் மாவட்டம் திருச்சோபுரத்தில், டிட்கோவின் கூட்டுத் துறை நிறுவனமான நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனம் செயற்படுத்தி வருகிறது. மேலும் இத்திட்டத்திற்காக தேவைப்படும் தனி துறைமுகம், எண்ணெய் கிடங்குகள் (Tankages) மற்றும் தனி மின்நிலையம் ஆகியவற்றை



நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனங்கள் ரூ.2,500 கோடி முதலீட்டில் அமைத்து வருகின்றன. இத்திட்டம், டிசம்பர், 2011ல் செயல்படத் துவங்கும்.

நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனம் சுமார் ரூ.12,000 கோடி முதலீட்டில் தனது பெட்ரோலிய சுத்திகரிப்பாலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 15 மில்லியன் டன்கள் அளவிற்கு உயர்த்தவும் மற்றும் பெட்ரோலிய இரசாயன தொழில்களை அமைப்பதற்கும் திட்டமிட்டு அதற்கான முதனிலை பொறியியல் ஏற்பாடுகளைத் தொடங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட திட்டங்கள் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின் கட்டுமான காலத்தில் சுமார் 5,000 நபர்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயற்படும்போது சுமார் 10,000 நபர்களுக்கும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் தனித்துறைமுகமான திருச்சோபுரம் துறைமுகத் திட்டம் கச்சா எண்ணெய், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரி

மற்றும் ஏனைய சரக்குகளை கையாளும் திறன் படைத்த ஒரு ஆழ்கடல் துறைமுகமாக உருவாக்கப்படும். இத்துறைமுகம் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களின் தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் கப்பல் கட்டும் தளம் மற்றும் சிறு துறைமுக வளாகம்

டிட்கோ மற்றும் லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனங்கள் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள காட்டுப்பள்ளி கிராமத்தில் உலகத் தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த கப்பல் கட்டும் தளம் மற்றும் சிறுதுறைமுக வளாகம் ஒன்றினைக் கூட்டுத்துறையில் உருவாக்கி வருகின்றன. கப்பல் கட்டும் தளமும், சிறு துறைமுக வளாகமும், உலகத் தரம் வாய்ந்த அளவில் இத்திட்டம் உருவாக உள்ளது. இந்த கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுக வளாகத்தில் மிகப் பெரிய சரக்கு கப்பல்கள், கடற்படைக்கு தேவையான போர்க் கப்பல்கள் மற்றும் நீர் மூழ்கிக் கப்பல்கள், பெட்ரோலிய முற்றாய்வு பணி மற்றும் உற்பத்தி செய்வதற்கான



உபகரணங்களடங்கிய மேடைகள், வணிக மற்றும் போர்க் கப்பல்களைச் செப்பனிடுதல் மற்றும் கப்பல் கட்டுமானத்திற்கு தேவையான கனரக இயந்திர பாகங்கள் தயாரிக்கும் வசதிகளும் பிரிவுகளும் உருவாக்கப்படும்.

இத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூ.4,675 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. முதல் கட்டத்தில் சுமார் ரூ.3,375 கோடி முதலீடு செய்யப்படும். திட்டத்தின் முதற்கட்டம் டிசம்பர் 2011ல் செயல்படத் தொடங்கும். இந்தக் கப்பல் கட்டும் வளாகம் சுமார் 10,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

### திரவநிலை எரிவாயு (LNG) இறக்குமதி முனையம், காட்டுப்பள்ளி, திருவள்ளூர் மாவட்டம்

மாநிலத்தில் அதிகரித்து வரும் எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் குறிப்பாக சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், திறன் வாய்ந்ததாகவும் உள்ள இயற்கை எரிவாயு தடையின்றி நீண்ட காலம் பெறுவதற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் காட்டுப்பள்ளி கிராமத்தில் திரவநிலை எரிவாயு முனையம் மற்றும்

அதனைச் சார்ந்த குழாய் தொடரமைப்பு ஆகியவற்றை சுமார் ரூ.10,000 கோடி முதலீட்டில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன்கள் திரவநிலை எரிவாயுவை கையாளும் திறனுடன் மின் உற்பத்தி, உர உற்பத்தி, தொழிற்சாலைகள், வீட்டுத் தேவைகள் மற்றும் போக்குவரத்து துறைகளுக்காக ஆண்டொன்றுக்கு சுமார் 18 மில்லியன் கனமீட்டர் எரிவாயுவை விநியோகிக்கும். இத்திட்டம் 2015ஆம் ஆண்டில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திரவநிலை எரிவாயு முனைய திட்டத்தை கூட்டுத்துறையில் அமைப்பதற்காக டிட்கோவும் மத்திய அரசிற்கு சொந்தமான இந்தியன் ஆயில் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துள்ளன. இத்திட்டத்திற்கான முதல் நிலை தொழில்நுட்ப செயற்திட்டங்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திரவநிலை எரிவாயு இறக்குமதி முனையம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான ஊக்குவிப்புகளைத் தமிழக அரசு அளித்துள்ளது.



**ட்ரில் இன்ஃபோபார்க் லிமிடெட் (டைடல் –III)**

புதிய முதலீடுகளைத் தகவல் தொழில் நுட்பத் துறையிலும், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலத் துறையிலும் ஈர்க்க 25.27 ஏக்கர் பரப்பளவில் சென்னை தரமணியில் டைடல் பார்க் நிறுவனத்திற்கு அருகில் டிட்கோவும், தனியார் தொழில் முனைவரும் இணைந்து ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க உத்தேசித்து உள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்த கூட்டுத் துறை பங்குதாரராக, டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃபிராஸ்ட்ரக்சர் நிறுவனத்தின் தலைமையிலான நட்பமைப்பு, திறந்த போட்டி ஏலமுறை மூலம் தேர்வு செய்யப்பட்டது. மொத்தம் 3.4 மில்லியன் சதுரஅடி பரப்பளவு செய்முறை மண்டலத்தில் இத்தகவல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவப்பட்டு வருகிறது. இதில், 1.30 மில்லியன் சதுரஅடி பரப்பளவு கட்டிடம் முடிவுபெற்று குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்தில் பணிசூழ் குடியிருப்புகள் (Serviced Apartments) மற்றும் ஒருங்கிணைந்த பன்னாட்டு கூட்ட அரங்கம் கட்டுமானப் பணிகள் முழுமையாக 2012ன் இறுதியில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா – II**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மற்றும் டைடல் பார்க் இணைந்து டைசெல் பயோ பார்க் என்ற நிறுவனத்தின் மூலம் சென்னையில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை ஏற்படுத்தின. இப்பூங்காவின் ஆராய்ச்சிக் கூடங்கள் அனைத்தும் செயல்பாட்டில் உள்ளன. ரூ.150 கோடி முதலீட்டில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா II-ன் கட்டுமானப் பணிகள் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் நடைபெற்று வருகின்றன. உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா II–ன் கட்டுமானப் பணிகள் டிசம்பர் 2011ல் முடிவுறும். இப்பூங்கா மூலம் 1500 விஞ்ஞானிகளுக்கு புதியதாக வேலை வாய்ப்பு ஏற்படும்.

**தகவல் தொழில்நுட்பப் பூங்கா, கோயம்புத்தூர்**

டிட்கோ, எல்காட், டைடல் மற்றும் இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனம் ஆகியவை இணைந்து கூட்டு முயற்சியில் அமைத்துள்ள டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவனம், கோயம்புத்தூரில் உள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலத்தில்,



ரூ.350 கோடி செலவில் 1.7 மில்லியன் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை அமைத்துள்ளது. இந்தப் பூங்கா, அக்டோபர் 2011இல் செயல்படத் தொடங்கும். இதன் மூலம் சுமார் 12,000 தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**பெரம்பலூர் சிறப்பு பொருளாதார மண்டலம்**

டிட்கோ நிறுவனம், ஐதராபாத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஜி.வி.கே. குழுமத்தினரை, இத்திட்டத்திற்கான கூட்டுத் துறை திட்ட முனைவராக தேர்வு செய்தது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக சிறப்பு நோக்கு அமைப்பு நிறுவனம் ஒன்று அதாவது ஜி.வி.கே பெரம்பலூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 2,900 ஏக்கர் தனியார் நிலங்களை நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் வாங்கியுள்ளது. இந்திய அரசிடமிருந்து பல்பொருள் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கான நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பெருந்திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்க ஆலோசனை நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது. நிலத்தை மேம்படுத்துதல்

மற்றும் கட்டுமானப் பணிகள் மத்திய அரசிடமிருந்து சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அறிவிக்கை பெறப்பட்ட பின் தொடங்கப்படும்.

**வானூர்தி தொழில் பூங்கா**

தமிழகத்தில் வானூர்தி உற்பத்தி சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக வானூர்தி தொழில் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன :–

1. ஒசூரில் ஏற்கனவே உள்ள தனேஜா ஏரோஸ்பேஸ் மற்றும் ஏவியேசன் லிமிடெட்டில் உள்ள திட்டத்திற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து பெற்றுத் தந்து மேலும் இங்கு பல புதிய திட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.
2. ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் விமானம் மற்றும் வானூர்திகளுக்கான உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு பிரத்யேக தொழில் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



3. சென்னை விமான நிலையத்தை ஒட்டிய பகுதியில் 50 ஏக்கர் பரப்பளவில் விமானங்கள் பழுது பார்க்கும் பணிமனை ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
4. விமான உதிரி பாகங்கள் மற்றும் தளவாடங்களை உற்பத்தி செய்து முழுமையான விமானத்தை தயாரிக்கும் நோக்கில் பெரம்பலூர் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஒருங்கிணைந்த வானூர்தி தயாரிப்பு பூங்கா ஒன்றினை 3,000 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்திற்கு ஒட்டிய பகுதியில் விமான பராமரிப்பு பணிமனை ஒன்றை அமைக்க நிலம் தேர்வு செய்ய டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஸ்ரீபெரும்புதூரில் விமான உதிரி பாகங்கள் தயாரிப்புப் பூங்கா அமைக்க 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யும்படி சிப்காட் நிறுவனத்தை டிட்கோ கேட்டுக் கொண்டுள்ளது. மேற்கண்ட திட்ட அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக திட்ட அறிக்கைகளைத் தயார் செய்வதற்கு எல் & டி – ராம்பால் என்ற ஆலோசகர் நிறுவனத்தை டிட்கோ நியமித்துள்ளது.

ஆலோசகர் நிறுவனம் திட்ட அறிக்கையை டிட்கோவிடம் சமர்ப்பித்துள்ளது.

### வரிக்கட்டுப்பாடற்ற வணிக கிட்டங்கி மண்டலம் (Free Trade Warehousing Zone), திருவள்ளூர் மாவட்டம்

சென்னை பிஸ்னஸ் பார்க் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (ஜாப்சா சென்னை) என்ற நிறுவனம் வரிக்கட்டுப்பாடற்ற வணிக கிட்டங்கி மண்டலம் மற்றும் போக்குவரத்து வளாகத்தை சுமார் 337 ஏக்கர் பரப்பளவில் ரூ.441 கோடி முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக முறையான ஒப்புதலை மத்திய அரசு அளித்துள்ளது. இந்தத் திட்டம் முழுமையாக நிறைவுபெறும்போது சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும்.

இத்திட்டத்தினை முதல் கட்டமாக சுமார் 135 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.190 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 106 ஏக்கர் நிலத்தை வல்லூர் மற்றும் இடையன்சாவடி கிராமங்களில் தனிப்பட்டவர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் வாங்கியுள்ளது.



### தகவல் தொழில்நுட்ப வழிப்பாதை திட்டம்

தகவல் தொழில் நுட்ப வழிப்பாதை (இராஜீவ் காந்தி சாலை) திட்டம் மத்திய கைலாஷ் கோயில் சந்திப்பில் தொடங்கி மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள கிழக்கு கடற்கரை சாலையில் முடிவடைகிறது. இத்திட்டம் இரண்டு கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் மத்திய கைலாஷ் கோயில் சந்திப்பிலிருந்து சிறுசேரி வரையுள்ள 20.1 கி.மீ தூரமும் 2.1 கி.மீ. தொலைவிற்கு சோழிங்கநல்லூரிலுள்ள தகவல் தொழில்நுட்ப சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலையும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் வேலைகள் மேற்கு பக்க பணிகளும் பாதசாரிகளுக்கான நடைபாதை மற்றும் சேவைப் பாதை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இரண்டாவது கட்டத்தில், சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை உள்ள சாலை மேம்படுத்தப்படும்.

### நிதி நகரம்

நிதி நகரம் மற்றும் ஊடகம் பொழுதுபோக்கு பூங்கா திட்டத்தை அமைப்பதற்காக இராஜீவ் காந்தி சாலைக்கு

அருகில் சோளிங்கநல்லூர் மற்றும் பெரும்பாக்கம் கிராமங்களில் சுமார் 187 ஏக்கர் நிலப்பரப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஒரு விரிவான வளர்ச்சித் திட்டத்தினை தயாரிப்பதற்கு திருவாளர்கள் பிரைஸ் வாட்டர் அவுஸ் கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் (PWC) தலைமையிலான அமைப்பு பணி அமர்த்தப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனம் வளர்ச்சித் திட்ட அறிக்கையை அரசுடன் கலந்தாலோசித்து இறுதி செய்யும். முதல் கட்டமாக 25 ஏக்கர் நிலத்தில் நிதி நகரம் அமைக்க தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.



## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும் நோக்கோடு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2000ஆம் ஆண்டு வரை நடுத்தர மற்றும் பெரும் தொழில் வளாகங்களை ஏற்படுத்துவதோடு தொழில் கடன் வழங்குதலிலும் முதன்மை நிறுவனமாக சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வந்தது. பின்பு தொழில் வளாகங்கள்/ பூங்காக்களைத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்கி வருகிறது.

தமிழகத்தின் பின்தங்கிய பகுதிகள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் காணும் பொருட்டு, பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை கொண்டுவரும் வகையில் சிப்காட் தனது பங்கினை செவ்வனே ஆற்றி வருகிறது.

### செயல்முறைச் சாதனைகள்

### தொழில் வளாகங்கள்/பூங்காக்களை மேம்படுத்துதல்

சிப்காட் நிறுவனம், இதுவரை, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 19 தொழில் வளாகங்களை உருவாக்கி மேம்படுத்தப்பட்ட 17,889 ஏக்கர் பரப்பு தொழில்

மனைகளை 1,979 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து அதன் மூலம் சுமார் 4.50 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை சுமார் 27,115 ஏக்கர் பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவல்லாமல், தொழில் முனைவோர்களின் தொழில் மனை தேவையினை உடனடியாக பூர்த்தி செய்யும் பொருட்டு நிலவங்கி ஒன்றினை உருவாக்கும் பிரேரணைகள் பரிசீலனையில் உள்ளன. இந்த நிலவங்கி விவசாய நிலங்களை கவனமாக தவிர்த்து, தரிசு மற்றும் சாகுபடிக்கு உதவாத நிலங்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பெருந்தொழிற்சாலைகளை அமைக்க பல முன்னணி தொழில் நிறுவனங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இவற்றில் சிப்காட் தொழில் வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள 30 தொழில் நிறுவனங்களில், 20 தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தியை ஏற்கனவே துவங்கிவிட்டன.



**தேர்வாய் கண்டிகை தொழில் வளாகம்**

2009ஆம் ஆண்டில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம், தேர்வாய் கண்டிகை கிராமத்தில் 1,127 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தைக் கொண்டு ஒரு புதிய தொழில் வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில், திருவாளர்கள் மிஷ்லின் இந்தியா தமிழ்நாடு டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஹர்ஷா குரூப் நிறுவனங்களுக்கு, அரசுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, முறையே 290 ஏக்கர் மற்றும் 85 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட மூன்று நிறுவனங்களுக்கு 128.07 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூபாய் 6,817 கோடி முதலீட்டில் 5,150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படவுள்ளது.

**மப்பேடு தொழில் வளாகம்**

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், மப்பேடு கிராமத்தில் 123.08 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் இப்புதிய தொழில் வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலப்பரப்பு முழுவதும் சென்னை துறைமுகத்துக்கு,

ரூ.260.50 கோடி முதலீட்டில், சுமார் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய உலர் துறைமுகம் மற்றும் பல்நோக்கு சரக்கு கையாளும் மையம் (Dry Port and Multi Modal Logistics Hub) ஏற்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மானாமதுரை தொழில் வளாகம்**

மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான மானாமதுரையில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் மற்றும் நுகர்வோர் மின்னணு சாதனங்களை தயாரிப்பதற்காக வீடியோகான் குழுமத்தைச் சார்ந்த திருவாளர்கள் யூனிட்டி அப்ளையன்சஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 94.99 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, சூரிய மின் உற்பத்தி தொழிற்கூடம் அமைக்க வீடியோகான் குழுமத்தைச் சார்ந்த நிறுவனத்திற்கு 30.44 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளதோடு மேலும் 4.76 ஏக்கர் நிலம் அதன் உதிரிபாகங்கள் தயாரிக்கும் யூனிட்டி அப்ளையன்சஸ் நிறுவனத்தின் துணை நிறுவனத்துக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**நடப்பில் உள்ள நில எடுப்பு திட்டங்கள்**

அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது, தூத்துக்குடி தொழில் வளாகம் நிலை II (1,179 ஏக்கர்), செய்யாறு தொழில் வளாக விரிவாக்கம் (2,300 ஏக்கர்), திருப்பெரும்புதூர் (வல்லம்–வடகால்) தொழில் வளாக விரிவாக்கம் (1,780 ஏக்கர்), ஓரகடம் தொழில் வளாக விரிவாக்கம் II (616 ஏக்கர்) , மதுரை தொழில் பூங்கா (1,478 ஏக்கர்) மற்றும் விழுப்புரத்தில் ஒரு புதிய தொழில் பூங்கா (720 ஏக்கர்) ஆகியவற்றுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் தேவையான தொழில் முனைவோர்களுக்கு வழங்க ஏதுவாக சுமார் 7,900 ஏக்கர் நிலம் இருப்பில் இருக்கும்.

**தென்மாவட்டங்களைத் தொழில்மயமாக்கல்**

தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் தொழில் வளர்ச்சியினை பரவலாக்கும் நோக்கில், சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தென்மாவட்டங்களில் அதன் தொழில் வளாகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிறுவனம் ஏற்கனவே தூத்துக்குடி, திருநெல்வேலி (கங்கைகொண்டான்), திண்டுக்கல்

(நிலக்கோட்டை), புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை (மானாமதுரை) ஆகிய தென்மாவட்டங்களில் தொழில் வளாகங்களை நிறுவியுள்ளது. தற்போது, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்தில் ஒரு புதிய தொழில் வளாகத்தை 1,478 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்க நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன், தூத்துக்குடி மாவட்டத்தில் (ஒட்டப்பிடாரம் வட்டம்) மேலும் ஒரு தொழில் வளாகத்தை 1,533 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்க கருத்தில் உள்ளது.

**சிறப்பு பொருளாதார மண்டலங்கள்**

சிப்காட் நிறுவனம் அதன் தொழில் வளாகங்கள் மற்றும் பூங்காக்களில் ஏழு சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது. அவை, திருப்பெரும்புதூரில் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் (570.92 ஏக்கர்), ஒரகடத்தில் மின்னணு வன்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம் (347.66 ஏக்கர்), பெருந்துறையில் பொறியியல் சிறப்பு பொருளாதார மண்டலம் (263.19 ஏக்கர்), கங்கைகொண்டானில் போக்குவரத்து பொறியியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (255 ஏக்கர்),



இருங்காட்டுக்கோட்டையில் காலணி மற்றும் தோல் பொருட்களுக்கான சிறப்பு பொருளாதார மண்டலம் (153.68 ஏக்கர்), இராணிப்பேட்டையில் பொறியியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (260 ஏக்கர்) மற்றும் பர்கூரில் கிரானைட் செய்முறை சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலம் (379.96 ஏக்கர்) முதலியனவாகும்.

**பர்கூரில் கிரானைட் தொழிலுக்கான சிறப்பு பொருளாதார மண்டலம்**

சிப்காட் பர்கூர் தொழில் வளர்ச்சி மையத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக 379.96 ஏக்கர் நிலப்பரப்பில் கிரானைட் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலம் நிறுவ மத்திய அரசின் அனுமதி மற்றும் அறிவிக்கை பெறப்பட்டுள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஒதுக்கீட்டுக்கு உரிய பரப்பான 300 ஏக்கரில், இதுவரை 254 ஏக்கர் நிலம் 47 நிறுவனங்களுக்கு கொள்கை அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 111.50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு வேண்டி 38 நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன.

**சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை**

சென்னை – திருப்பெரும்புதூர் – இராணிப்பேட்டை – ஒசூர், மதுரை – தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் – சேலம் மண்டலங்களைச் சிறப்புத் தொழில் பெருவழிச் சாலைகளாக மேம்படுத்த வேண்டி அதற்கான பெருவழி மேம்பாட்டுத் திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியில் சிப்காட் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இச்சிறப்புத் தொழில் பெருவழிச் சாலைகளில் தொழிற் பூங்காக்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியம் ஆகியவை உலகத் தரத்துடன் கூடிய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்கப்பட்டு அவை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுடன் விரைவு நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கப்படும். இம்மண்டலங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே பெருவழி மேம்பாட்டுத் திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. சென்னை–திருப்பெரும்புதூர் –இராணிப்பேட்டை மண்டலம் பகுதி–Iக்காக தயாரிக்கப்பட்ட இறுதி திட்ட அறிக்கை முடிவடைந்து,



அதனைத் தொடர்ந்து பகுதி–IIக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**திறன் மேம்பாட்டு மையங்கள்**

அரசின் அறிவிப்பிற்கிணங்க, சிப்காட் தொழில் வளாகங்கள் அமைப்பதற்காக ஒரு ஏக்கர் மற்றும் அதற்குமேல் நிலம் வழங்கிய குடும்பத்தினரில் ஒருவருக்காவது இவ்வளாகங்களில் அமையப்பெறும் தொழிற்சாலைகளில் வேலை வழங்கிட சிப்காட் நிறுவனம் ஆவன செய்து வருகிறது. இதற்காக, அக்குடும்பங்களில் தகுதி படைத்த இளைஞர்கள் பற்றிய கணக்கெடுப்புப் பணி முடிந்து, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம், இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, மூன்று திறன் மேம்பாட்டு மையங்களை திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம், திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்வாய்க் கண்டிகை தொழில் வளாகம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் ஆகிய இடங்களில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திறன் மேம்பாட்டு மையங்களில் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு

அவர்களின் திறமைக்கேற்ப பணி வழங்க பரிந்துரைக்கப்படும். ஒரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் இத்திறன் மேம்பாட்டு மையத்தினை ரூபாய் 196.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட பணி ஆணை வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்**

சிப்காட் நிறுவனம், அதன் தொழில் வளாகங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும்போது, உள்ளூர் மக்களின் பயன்பாட்டிற்காக, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தருதல், குடியிருப்புகளுக்கான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் / பழைய கட்டிடங்களைப் புதுப்பித்தல், சுகாதார மையம் மற்றும் மயானம் அமைத்தல், கால்நடைத் தீவனப்பயிர் வளர்க்கும் திட்டம், விளையாட்டுத்திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், குடிநீர் வசதி செய்து தருதல் போன்ற சமூக மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்சமயம், இதுபோன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் பல,



ஒரகடம் (விரிவாக்கம்) மற்றும் தேர்வாய்கண்டிகை தொழில் வளாகங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், சிப்காட் நிறுவனம், தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஆண்கள், பெண்கள் தங்குவதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய இரண்டு தங்குமிடங்களை (dormitories) ஒன்று திருப்பெரும்புதூரிலும் மற்றொன்று திருப்பூரிலும் கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒவ்வொரு தங்குமிடமும் 1,000 பணியாளர்கள் தங்கக்கூடிய வகையில் அமையும். இதற்காக திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சலில் ஒரு இடமும் (நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது), காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காவில் மற்றொரு இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், திருப்பெரும்புதூரில் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

**அயல் நாடுகளிலிருந்து தொழில் முதலீட்டினை ஈர்க்கும் திட்டம்**

சிப்காட் நிறுவனம், ஜப்பான், கொரியா, பின்லாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து அதிக அளவில் அந்நிய முதலீட்டினை

ஈர்ப்பதற்காக அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தொழில் வளாகங்கள் ஏற்படுத்த தலா 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது. திருப்பெரும்புதூர் தொழில் வளாக விரிவாக்கத் திட்டத்தில் இதற்கான நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நீர் பெருக்குத் திட்டம்**

இரண்டாம் கட்ட சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை மூன்றாம் கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் மறுசுழற்சி அடிப்படையில் சுத்திகரித்து அதனை திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை மற்றும் ஒரகடம் தொழில் வளாகங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கும் நவீன திட்டம் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம் மூலம் தகுதியான தனியார் நிறுவனத்தால் செயல்படுத்தப்படவுள்ளது.

**திருப்பெரும்புதூர் பகுதி மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த திட்டம்**

அரசு அறிவிப்பிற்கிணங்க, சிப்காட் நிறுவனம் திருப்பெரும்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக



அடிப்படை மற்றும் சமூக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு, நவீன குடியிருப்பு வசதியினை ஏற்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் (Comprehensive Plan) ஒன்றினைத் தயாரித்து வருகிறது. தற்போது இத்திட்டத்தின் வரைவு இறுதி நிலை அறிக்கை (Draft Final Report) பெறப்பட்டுள்ளது.

**சுற்றுச் சூழல் பாதுகாப்பு**

உச்சநீதிமன்ற கண்காணிப்பு குழுவின் ஆணைப்படி, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் அபாயகரமான கழிவுகளைத் தக்க முறையில் பதப்படுத்தி வெளியேற்ற அக்கழிவுகளைச் சுத்திகரித்து, சேமித்து அகற்றும் திட்டம் கும்மிடிப்பூண்டி சிப்காட் ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற் பூங்காவில் 26.91 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை சங்கத்தினால் தமிழ்நாடு கழிவுகள் மேலாண்மை நிறுவனம் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

**கட்டுமானப் பணிகள்**

சிப்காட் நிறுவனம், அதிக அளவில் முதலீட்டினை ஈர்க்கும் நோக்கில் அதன் தொழில் வளாகங்களில் உலகத் தரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி

வருகிறது. கடந்த ஆண்டில் சாலைகள், நீர்வழங்கல், தெரு விளக்குகள், வடிகால் அமைப்புகள், கட்டிடங்கள் போன்ற வசதிகளை மொத்தம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பர்கூர் மற்றும் தேர்வாய் கண்டிகை பகுதிகளில் அமையப் பெறும் தொழிற்சாலைகள் மற்றும் அங்குள்ள கிராம மக்களின் போக்குவரத்து வசதிக்காக, மாநில நெடுஞ்சாலைகளுடன் இணைப்பதற்கான பின்வரும் இரண்டு சாலை பணிகள், நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வைப்புப் பணியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது :

1. இரு வழிப்பாதை இணைப்பு சாலை கி.மீ. 5/150 – 10/000–ல் போச்சம்பள்ளி – கொடமண்டப்பட்டி சாலை மற்றும் பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் பஞ்சாயத்து யூனியன் சாலை கி.மீ. 0/0 – 1/600.

   திட்ட மதிப்பு ரூ.12 கோடி

2. நெடுஞ்சாலையில் இருந்து இணைப்பு சாலை, திருவள்ளூர் மாவட்டம் சூலைமேனி – தேர்வாய்கண்டிகை சாலையில் கி.மீ 0/000 – 4/200.

   திட்ட மதிப்பு ரூ.22 கோடி

ஒசூரில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உலகத்தரத்திற்கு மேம்படுத்தவும், பராமரிக்கவும் சிப்காட் நிறுவனம் சிறப்பு குறிக்கோள் நிறுவனம் (SPV) ஒன்றினை அமைத்துள்ளது. இச்சிறப்பு நிறுவனம் இதற்கான நிதியை



மத்திய அரசிடமிருந்து Industrial Infrastructure Upgradation Scheme (IIUS) திட்டத்தின் கீழ் பெறத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**முகவாண்மைச் செயல்பாடு**

சிப்காட் நிறுவனம், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அரசின் தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசின் முகவாண்மை அலுவலராக (Nodal Agency) இருந்து செயல்படுத்தி வருகிறது. அரசு ஆணைகளின் அடிப்படையில், பல்வேறு ஊக்க நிதி உதவிகள் முறையே, மென்கடன், முதலீடு மேம்பாட்டு நிதி உதவி, மதிப்புக் கூட்டு வரி திரும்பப் பெறுதல், முதலீட்டு மானியம், கழிவு நீர் சுத்திகரிப்பு தளவாடங்களை நிறுவுதல் / சுற்றுச்சூழல் பாதுகாப்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதி உதவித் தொகை மற்றும் பயிற்சி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தொகுப்பு ஊக்க நிதியுதவித் திட்டத்தின் கீழ் இதுவரை 56 நிறுவனங்களுக்கு அரசாணைகள் பெறப்பட்டுள்ளன. சிப்காட் நிறுவனம் இதுவரை பத்து நிறுவனங்களுக்கு ரூ.1,110.50 கோடி தொகுப்பு ஊக்க நிதி உதவியாக வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

### செயல்பாடுகள்

மாநில அளவிலான நிதி நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இந்தியாவிலேயே முதன்மையானதாகும். இக்கழகம் 1949ஆம் வருடம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகிறது. நிலம், கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் வாங்க நிறுவனங்களுக்கு நீண்ட தவணையில் கடன் உதவி வழங்குவதன் மூலம் தமிழ்நாடு தொழிலில் முன்னேற்றம் காண வேண்டும் என்பது இக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். மேலும், இக்கழகம் உணவகம், மருத்துவமனை மற்றும் சுற்றுலா தொடர்புடைய பொதுச் சேவை நிறுவனங்களுக்கும் கடன் உதவி அளித்து வருகிறது. இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம் புதிய தலைமுறை தொழில் முனைவோர் உருவாக உதவி புரிகிறது. தோராயமாக 90 விழுக்காடு நிதியுதவி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. அளிக்கப்படும் நிதியுதவியில் சுமார் 50 விழுக்காடு, முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு



செல்கிறது. மேலும், மாநில மற்றும் மத்திய அரசு வழங்கும் மானியத் தொகைகளைப் பயனாளிகளுக்கு வழங்குகிறது. கடந்த ஆண்டில், மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையிடம் இருந்து கடன் சார்ந்த மூலதன மானியத் திட்டத்தின் (Credit Linked Capital Subsidy Scheme) கீழ் ரூ.10.29 கோடி பெற்று அதைப் பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது. மேலும், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) இயந்திரங்களுக்காக ரூ.5.08 கோடியும் மற்றும் மின்னாக்கிகள் வாங்குவதற்காக ரூ.0.85 கோடியும் பட்டுவாடா செய்துள்ளது.

இதுவரை, இக்கழகம் 1,09,214 நிறுவனங்களுக்கு ரூ 8,611.80 கோடி கடன் வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு மட்டுமே இக்கழகம் சுமார் 16,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

தொடர்ந்து எட்டாவது வருடமாக இக்கழகம் நிகர லாபம் ஈட்டி வருகின்றது. கடந்த ஆண்டில் மற்ற எந்த ஆண்டிலும் இல்லாத அளவு தோராயமாக ரூ.53.50 கோடி அளவிற்கு இலாபம் ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் அளிக்கப்பட்ட பல்வகை கடன் தொகை ரூ.1,351.23 கோடியாக இருந்தது (தற்காலிகமானது). கடனுதவித் தொகையை ரூ.5,000 கோடிக்கு உயர்த்த வேண்டும் என்பது இக்கழகத்தின் குறிக்கோளாகும்.

இக்கழகம் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம் மூலம் இளைய தலைமுறை தொழில் முனைவோருக்குப் பயிற்சி அளிக்கிறது. கடந்த ஆண்டில் சுமார் 1,865 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து உள்ளனர்.

வணிக வங்கிகளும் தொழில் நடத்துவதற்கு நிதி உதவி செய்தாலும், சமூகத்தில் குறைந்த அளவே ஆதரவு பெற்ற, பின் தங்கிய நிலையில் உள்ள புதிய தலைமுறை தொழில் முனைவோர் நிதி உதவிக்காக இக்கழகத்தையே நாடுகின்றனர்.

**இக்கழகம் நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் சில பின்வருமாறு :**

1. குறு / சிறு நிறுவன நிதி திட்டம் ;
2. TNEB, TWAD, TANSI நிறுவனங்களுக்காக பட்டியல் நிதி திட்டம் ;
3. அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு நடைமுறை மூலதன திட்டம் ;



4. காற்றாலை திட்டம் ;
5. நெசவு தொழில்களுக்கான தொழில் நுட்பவியல் மேம்பாட்டு நிதித் திட்டம் ;
6. தளவாட நிதித் திட்டம் ;
7. சரக்கு போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கான திட்டம்.

**தொழில் முனைவோர் வளர் திட்டம்**

இக்கழகத்திற்கு உள்ள சமுதாயப் பொறுப்பு மற்றும் புதிய தலைமுறை தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய, சொத்து ஜாமீன் கொடுக்க இயலாத, புதிய தலைமுறை தொழில் முனைவோருக்கு உதவும் விதமாக தொழில் முனைவோர் வளர் திட்டம் ஒன்றை இக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சொத்து ஜாமீன் இல்லாமல், தொழில் முனைவோர் மூலதன பங்கு 10 விழுக்காட்டில், ரூ.5 இலட்சம் வரை கடன் அனுமதிக்கப்படுகிறது. தொழிலை வெற்றிகரமான முறையில் நடத்த வழிகாட்டும் தன்னலமற்ற நபர் ஒருவர் தொழில் நடத்துபவருக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அந்நபர் சமுதாயத்தில் மதிப்புமிக்கவராகவும், நிதி மற்றும் பிற நிறுவனங்களிடம் எந்தவொரு குறைபாடும்,

புகார்களும் இல்லாதவராக இருத்தல் வேண்டும். இதுவரை 2,176 நிறுவனங்களுக்கு ரூ.39.59 கோடி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் சுமார் 3,000 பயனாளிகள் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**காப்பீடு**

இக்கழகம் காப்பீடு முகவராக (Insurance Agency) செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில், ரூ.1.56 கோடி (தோராயமாக) ஈட்டுறுதி தொகையாகவும் (premium), ரூ.10.12 இலட்சம் வருமானமாகவும் பெறப்பட்டது. நடப்பு நிதியாண்டில் (2011–12) இது முறையே ரூ.2 கோடி ஈட்டுறுதி தொகையாகவும் (premium), ரூ.20 இலட்சம் வருமானமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளுக்கான தொழில் கடன் வழங்குவதற்கான செயல் திட்டங்கள்**

(ரூ.கோடியில்)

| ஆண்டு | அனுமதித்தல் | வழங்குதல் | வசூலித்தல் |
|---|---|---|---|
| 2011–12 | 1,110.00 | 870.00 | 745.00 |
| 2012–13 | 1,220.00 | 950.00 | 780.00 |



## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் ஒரு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக 1979ஆம் ஆண்டில் தமிழக அரசால் நிறுவப்பட்டது. 1984ஆம் ஆண்டில் தொடக்க உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 90,000 டன்னாக இருந்தது. இந்நிறுவனம், படிப்படியாக தனது உற்பத்தித் திறனை அதிகரித்து தற்போது ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் என்ற நிலையை அடைந்துள்ளதுடன், இந்தியாவிலேயே ஒரே இடத்தில் அமைந்துள்ள ஒரு மிகப் பெரிய காகித நிறுவனமாகவும், காகித உற்பத்தியில் இந்திய அளவில் இரண்டாம் பெரிய நிறுவனமாகவும் திகழ்கிறது.

**குறிக்கோள்**

‘புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உலகத் தரம் வாய்ந்த சுற்றுச் சூழலுக்கு நேசமான காகிதங்களைத் தயாரிப்பதில் முதன்மை நிறுவனமாகத் திகழ்தல்.’

**கடந்த ஆண்டில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் பயன்பாடு**

காகித இயந்திரம் எண்.1 மற்றும் காகித இயந்திரம் எண்.2 மூலம் 2,44,782 டன் காகித உற்பத்தி செய்து 99.91

விழுக்காடு உற்பத்தித்திறன் பயன்பாட்டினை அடைந்தது. மூன்றாவது காகித இயந்திரம் இவ்வாண்டு தொடங்கப்பட்டு, முதல் 72 நாட்களில் 20,262 டன் உற்பத்தி செய்து 66.27 விழுக்காடு உற்பத்தித்திறன் பயன்பாட்டினை அடைந்தது. மொத்த உற்பத்தித்திறன் பயன்பாட்டளவு 96.18 விழுக்காடு ஆகும்.

**கடந்த ஆண்டிற்கான இலாபம்**

வரிக்கு முந்தைய இலாபம் - ரூ.195.14 கோடி ஆகும்.

**குறிப்பிடத்தக்க சிறப்பு முயற்சிகள்**

- நிறுவனம், தனது ஆலை விரிவாக்கத் திட்டத்தை ரூ.1000 கோடி மூலதனத்தில் செயல்படுத்தி, காகித உற்பத்தித்திறனை ஆண்டொன்றுக்கு 2,45,000 மெட்ரிக் டன்னிலிருந்து 4,00,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தியது. ஆலையின் உள் கூழ் உற்பத்தித்திறன், நாளொன்றுக்கு 720 டன்னிலிருந்து 820 டன்னாக உயர்த்தப்பட்டது. இதன்மூலம் மொத்த காகித உற்பத்தி 2011–12ஆம் ஆண்டிற்கு 4 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



- **2004–05ஆம் ஆண்டில், முதல் முறையாக, பண்ணைக்காடு மரக்கூழ் வனத் தோட்ட திட்டத்தை விவசாய பண்ணை மற்றும் சுய பண்ணை என்ற இரு சிறப்புமிக்கத் திட்டங்களாக செயல்படுத்தியது. இதுவரை மொத்தம் 67,055 ஏக்கர் பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளது. 2012-13ஆம் ஆண்டில் சுமார் 1 லட்சம் ஏக்கர் என்ற இலக்கை அடையும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.**
- புதிய காகித ரகங்களான மேற்பூச்சு செய்யப்பட்ட ‘‘பிரிண்ட் விஸ்டா’’, உயரிய அச்சு இயந்திரங்களுக்கான உயர் தர காகிதமான “பிக்மெண்ட் காகிதம்” மற்றும் “பிளாட்டினம் காப்பியர்” (70, 75 & 80 gsm) ஆகியவை 3வது புதிய காகித இயந்திரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**2011–12ஆம் ஆண்டில் எடுக்க உள்ள குறிப்பிடத்தக்க முயற்சிகள்**

- காகிதம் உற்பத்தி செய்யும்போது பெறப்படும் சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பல் ஆகிய கழிவுப் பொருட்களைக் கொண்டு, நாளொன்றுக்கு 600 டன்கள் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்ட்

தொழிற்சாலை ஒன்றினை இந்நிறுவனம் ரூ.69 கோடி மூலதனத்தில் நிறுவி வருகிறது. இத்திட்டத்தை டிசம்பர் 2011க்குள் நிறுவி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- கூழ் தேவையை முழுவதுமாக பூர்த்தி செய்யும் நோக்கத்தில் நிறுவனத்தின் உள் கூழ் உற்பத்தியை அதிகரிக்க நாளொன்றுக்கு 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட மை நீக்கம் செய்யப்பட்ட கூழ் தயாரிக்கும் புதிய தொழில்நுட்பம் கொண்ட ஆலையை ரூ.174 கோடி மூலதனத்தில் இந்நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்தை மார்ச் 2012இல் நிறுவி முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.
- ரூ.135 கோடி மூலதனத்தில் நீராவி மற்றும் மின் உற்பத்தி அமைப்புகளைச் சீரமைத்து புதுப்பிக்கும் நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தேவைப்படுகின்ற பெரிய இயந்திரங்களைக் கொள்முதல் செய்வதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஏப்ரல் 2012இல் நிறுவி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



**சமுதாய நலம்**

இந்நிறுவனம் சமுதாய வளர்ச்சியில் அக்கறையுள்ள நிறுவனமாக தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் வகையில் தனக்கான சமுதாயப் பொறுப்புகளை உணர்ந்து, நிறுவனத்தைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார வளர்ச்சி போன்ற சமுதாய வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்களுக்காக, ஒவ்வொரு ஆண்டும், நிறுவனத்தின் முந்தைய ஆண்டுக்கான வரிக்குப்பின் இலாபத்தில் 3 விழுக்காடு செலவழித்து வருகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

தமிழ்நாடு மாநிலம் ஆண்டொன்றுக்கு 32.27 மில்லியன் டன் நிறுவுதிறனுடன் சிமெண்ட் உற்பத்தியில் இந்தியாவில் மூன்றாவது பெரிய மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டில் 16 பெரிய சிமெண்ட் தொழிற்சாலைகளும், நான்கு சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகளும் உள்ளன. அவற்றில், பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் (டான்செம்) கட்டுப்பாட்டில் 2 பெரிய சிமெண்ட் தொழிற்சாலைகள் ஆண்டொன்றுக்கு 9 இலட்சம் மெட்ரிக் டன்கள் உற்பத்தி நிறுவுதிறனுடன் செயல்பட்டு வருகின்றன.

1976ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் அன்று நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமாக டான்செம் நிறுவனம் நிறுவப்பட்டது. 1970ஆம் ஆண்டில், டிட்கோ நிறுவனத்தால் நிறுவப்பட்ட ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை டான்செம் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. மற்றொரு சிமெண்ட் ஆலையை 1979ஆம் ஆண்டில்



அரியலூரிலும், கல்நார் தகடு ஆலையை 1981ஆம் ஆண்டில் ஆலங்குளத்திலும், கல்நார் சிமெண்ட் அழுத்தக்குழாய் ஆலையை 1984ஆம் ஆண்டில் மாயனூரிலும் டான்செம் நிறுவனம் அமைத்தது. பின்னர், விருத்தாச்சலத்தில் இயங்காமல் இருந்த கற்குழாய் ஆலையைத் தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து டான்செம் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. 31.12.1994 முதல் டான்செம் நிறுவனம், அரசுக்கு முழுவதும் சொந்தமான நிறுவனமாக மாறியது.

பல்வேறு பொருட்களை, வெவ்வேறு இடங்களில் தயாரிக்கும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆண்டு மொத்த விற்பனை ரூ.325 கோடி ஆகும். சிமெண்ட், இந்நிறுவனத்தின் பிரதான உற்பத்திப் பொருளாகும். இந்நிறுவனத்தின் ஏனைய தயாரிப்புகள் கல்நார் தகடு மற்றும் கற்குழாய் போன்றவைகளாகும்.

தமிழக அரசின் சார்பாக பல சுரங்கங்களில் இருந்து சுண்ணாம்புக் கல்லை வெட்டி எடுத்து சிமெண்ட் உற்பத்தி செய்து, குறிப்பாக அரசு சார்பாக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களான நலிந்த

பிரிவினருக்கு வீடு வழங்கும் திட்டம், கல்வி, சுகாதாரம், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் போன்றவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான சிமெண்ட் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பு டான்செம் நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தனது தயாரிப்புகளை அரசுத் துறைகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்தல் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் தொடர்ந்து வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவைகளில் ஈடுபட்டு, பொதுமக்கள் நலனுக்காக பணியாற்ற உறுதிபூண்டுள்ளது. சிமெண்ட் தேவை அதிகரித்து வருவதாலும், **43** கிரேடு தரமுள்ள சாதாரண போர்ட்லேண்ட் சிமெண்ட் குறைந்த அளவில் கிடைப்பதாலும் தமிழக அரசின் விலை முன்னுரிமை ஒப்புதலைப் பயன்படுத்தி அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு டான்செம் நிறுவனம் தனது முழு உற்பத்தியையும் விநியோகிக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கூடுதல் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு தனியார்



சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் கொள்முதல் செய்து தரும் பொறுப்பு டான்செம் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான சிமெண்ட் முறையாக வழங்கப்படுவதில் டான்செம் நிறுவனம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்**

தமிழ்நாட்டில் அதிக அளவிலான உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் காரணமாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மற்றும் ஏனைய அரசுத் துறை நிறுவனங்களில் சிமெண்ட்டிற்கான தேவை அதிகரித்து வருகிறது.

1) டான்செம் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவுகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்க கருதப்பட்டுள்ளது. விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக, முதற்கட்டமாக ஆலங்குளம் ஆலையில் தற்போதுள்ள உற்பத்திச் செயல்திறன் அளவான

ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் என்ற அளவிலிருந்து ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னாக உயர்த்துவதற்கு முடிவெடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2) ரூ.350 கோடி திட்ட மதிப்பீட்டில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் உற்பத்தித் திறனுடைய புதிய ஆலையை உருவாக்கி, அதன் மூலம் அரியலூர் ஆலையின் தற்போதைய உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் அளவிலிருந்து, ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் டன் அளவிற்கு உயர்த்துவதற்கான திட்டத்தை டான்செம் நிறுவனம் செயல்படுத்தக் கருதியுள்ளது.

3) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வீட்டு வசதித்துறை, குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் போன்றவற்றின் திட்டங்களைச் செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு நியாயமான விலையில் சிமெண்ட் வழங்கும் பொருட்டு, மூட்டை ஒன்றுக்கு ரூ.235/– என்ற விலையில் விநியோகம் செய்ய



தனியார் துறையுடன் டான்செம் நிறுவனம் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது.

4) சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், நலிந்த மற்றும் நடுத்தர மக்கள் நியாயமான விலையில் சிமெண்டினைப் பெறும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சிமெண்ட் வழங்கப்பட்டு வருகிறது.

5) வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வெளிநாடுகளில் இருந்து 5 இலட்சம் டன் வரை சிமெண்ட் இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை டான்செம் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.

**சாதனைகளும், செயல் திட்டங்களும்**

- கடந்த ஆண்டில் டான்செம் நிறுவனம் ரூ.840.39 இலட்சம் நிகர லாபத்தை ஈட்டியுள்ளது (தற்காலிகம்).
- அரியலூர் சிமெண்ட் ஆலை, கடந்த ஆண்டில் ரூ.18 கோடி நிகர லாபத்தை ஈட்டியுள்ளது.
- கடந்த ஆண்டில் விருத்தாச்சலத்தில் உள்ள கற்குழாய் ஆலை சிறப்பாக செயல்பட்டு ரூ.22.04 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. கிரானைட் பாளங்கள், கிரானைட் பொருட்கள், பெருங்கனிமங்கள் மற்றும் சிறுகனிமங்களை ஆராய்ந்து வெட்டியெடுத்து அவைகளைச் சந்தையில் விற்பதுதான் இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்நிறுவனம் கருப்பு வெள்ளை, பாரடைசோ மற்றும் பல வண்ண கிரானைட் பாறைகளையும், பெருவகைக் கனிமங்களான சுண்ணாம்புக்கல், கிராபைட், சிலிகா மணல், வெர்மிகுலைட், குவார்ட்ஸ் மற்றும் பெல்ட்ஸ்பார் ஆகியவற்றை அறிவியல் முறையில் வெட்டியெடுத்து முறையாக விற்பனை செய்து வருகின்றது.

### 1. புதிய திட்டங்களின் முன்னேற்றம்

### (அ) 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய மேலூர் கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை

தமிழ்நாடு கனிம நிறுவனம் மதுரை மாவட்டம் மேலூரில் 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவி வருகிறது. இத்தொழிற்சாலை மூலம் ஆண்டிற்கு 2 – 3



செ.மீ வரை கனமுள்ள 1,80,000 சதுர மீட்டர் கிரானைட் கற்பலகைகளை ரூ.34.25 கோடி திட்ட மதிப்பீட்டில் உற்பத்தி செய்ய இருக்கிறது. இத்திட்டத்திற்காக மேலூரில் 20 ஏக்கர் நிலம் கைத்தறித் துறையிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கு ரூ.17 கோடி மதிப்பீட்டில் மூன்று பெரிய அளவிலான பாறைகளை அறுக்கும் இயந்திரம், ஒரு மெருகிடும் இயந்திரம் மற்றும் ஒரு ரெசின் தடவும் இயந்திரம் ஆகியவை இத்தாலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மார்ச் 2012இல் இத்தொழிற்சாலை தனது உற்பத்தியினைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டிற்கு சுமார் ரூ.50 கோடி விற்பனை இலக்கை எட்டி ரூ.8 கோடி நிகர லாபம் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

### (ஆ) மேலூரில் சிறு ஓடு தயாரிக்கும் தொழிற்கூடம்

உள்நாட்டு தேவைக்காக மேலூரில் சிறு ஓடு தயாரிக்கும் தொழிற்கூடத்தை இந்நிறுவனம் நிறுவியுள்ளது. இத்தொழிற்கூடம் ஆண்டு ஒன்றிற்கு 1,08,000 சதுரஅடி ஓடுகளை உற்பத்தி செய்யும். இது ரூ.60 இலட்சம் செலவில் கிரானைட் அறுக்கும் மூன்று இயந்திரங்கள், கையினால் மெருகிடும் நான்கு

இயந்திரங்கள் மற்றும் விளிம்புகளை அறுக்கும் ஒரு இயந்திரத்தையும் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்கூடம் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**(இ) டாமின் கிரானைட்ஸ், மணலி**

இத்தொழிற்சாலை 1986ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் மெருகிடப்பட்ட கட்டிட பலகைகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் அறுக்கப்பட்ட அடர்த்தியான பலகைகள் முதலியன தயாரிக்கப்பட்டன. தற்போது அங்கு இருக்கும் இயந்திரங்கள் மிகவும் பழையவை. எனவே, 2008 முதல் கிரானைட் பலகைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. புதிய இயந்திரங்களை நிறுவுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு 1,20,000 ச.மீ. பலகைகளை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்ய இயலும். இதனால் ரூ.30 கோடிக்கு விற்பனை செய்து ரூ.4 கோடி நிகர இலாபம் ஈட்டலாம். மணலி தொழிற்சாலையை சுமார் ரூ.12 கோடி செலவில் நவீனப்படுத்துவது தொடர்பான திட்ட அறிக்கை குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



**2. விரைவில் வரவுள்ள திட்டம்**

**சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை விரிவாக்கம்**

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சிவகங்கை சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் கிராபைட் தாதுவைக் கொண்டு தொழில் துறை பயன்பாட்டிற்கு ஆண்டிற்கு 96 விழுக்காடு வரை செழுமைப்படுத்திய கிராபைட் செதில்கள் சுமார் 6000 மெ.டன் உற்பத்தி செய்து ரூ.14 கோடிக்கு விற்பனை செய்து ஆண்டிற்கு ரூ.2 கோடி நிகர லாபம் ஈட்டப்படுகிறது. கிராபைட் செதில்கள் ஜெர்மன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்ளூர் மற்றும் ஏற்றுமதி தேவைக்கேற்ப இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

குரும்பபட்டி காப்புக் காடு வனப்பகுதியில் சேலம் மேக்னசைட் நிறுவனத்தால் இயக்கப்பட்டு வந்த சுரங்கத்தை எடுத்துக் கொண்டு 1979இல் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டேன்மேக்) நிறுவப்பட்டது. இந்நிறுவனம் கச்சா மேக்னசைட்டிலிருந்து முழு சூடேற்றிய மேக்னசைட் மற்றும் மித சூடேற்றிய மேக்னசைட் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது.

**2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் உற்பத்தி மற்றும் விற்பனை**

| விபரங்கள் | 2011–12 | | 2012–13 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| | (அளவு மெட்ரிக் டன்களில்) | | | |
| கச்சா மேக்னசைட் | 1,31,000 | 1,31,000 | 1,33,000 | 1,33,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 35,500 | 35,500 | 36,250 | 36,250 |
| மித சூடேற்றிய மேக்னசைட் | 17,500 | 17,500 | 18,000 | 18,000 |

கடந்தாண்டில் டேன்மேக் நிறுவனம் ரூ.685.11 இலட்சங்கள் (துணிக்கைக்குட்பட்டது) வரிக்கு முந்தைய இலாபம் ஈட்டியது. 2011–12ஆம் ஆண்டில் ரூ.981.07 இலட்சங்கள் வரிக்கு முந்தைய இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது.



## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் 1983ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. காட்பாடியில் உள்ள இதன் தொழிற்சாலை 1986ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தியைத் துவக்கியது. இது நலிவுற்ற காரணத்தால் செப்டம்பர் 1992ஆம் ஆண்டில் தொழில் மற்றும் நிதிப்புனரமைப்பு நிறுவனத்தின் கீழ் கொண்டு செல்லப்பட்டது. நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை ஒரே தவணையில் செலுத்தி அக்டோபர் 2001 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு நிறுவனத்திடமிருந்து இந்நிறுவனம் மீண்டுள்ளது. இந்நிறுவனத்தில் மொத்தம் 547 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

சுரங்கம் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்குத் தேவையான தரம் வாய்ந்த வெடிபொருட்களை இந்நிறுவனம் உற்பத்தி செய்து வருகிறது. கடந்த வருடகாலங்களில் இந்நிறுவனம் தன் பொருட்களின் தரத்தை உறுதி செய்து சந்தையில் நல்ல பெயரைத் தக்க வைத்துள்ளது. இந்நிறுவனம் பல பாதுகாப்பு

சான்றிதழ்களையும் பெற்றுள்ளது. இதன் உற்பத்திப் பொருட்களை, பொதுத்துறை நிறுவனங்களான எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம், சிங்கரேணி சுரங்க நிறுவனம், ஹட்டி தங்க சுரங்க நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், இந்துஸ்தான் காப்பர் நிறுவனம், விசாகப்பட்டினம் உருக்கு நிறுவனம், ராஜஸ்தான் கனிம நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. இதன் பொருட்களை ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இதன் பொருட்களின் தரம், பாதுகாப்பான உற்பத்தி மற்றும் சுற்றுப்புறச் சூழல், மாசுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்காக ISO 9001:2008, ISO 14001–2004 மற்றும் OHSAS 18001:1999 போன்ற நிறுவன சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

எழுபது சதவீதத்திற்கும் மேலாக விற்பனையை நிறுவனத்திற்கு பெற்றுத்தந்த நைட்ரோ கிளிசரின் (என்.ஜி.) வெடிபொருட்களின் உற்பத்தி மற்றும்



விற்பனையை மத்திய அரசு தடை செய்ததால் இந்நிறுவனத்தின் செயல்திறன் வெகுவாக பாதிக்கப்பட்டு, அதன் பின்னர் நட்டத்தில் இயங்கத் தொடங்கியது. இந்தத் தடைக்குப்பின், நிறுவனம் எமல்ஷன் வெடிபொருட்கள், மோனோ மிதைல் அமைன் நைட்ரேட் போன்ற புதிய வெடிபொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கியது.

மதிப்புக் கூட்டிய வெடிபொருட்களை உற்பத்தி செய்வதற்காக இந்நிறுவனம் மேக்ஸம் கார்ப் என்ற ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த, வெடிமருந்து உற்பத்தியில் உலகில் மூன்றாவது இடம் வகிக்கும் ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

### 2011–12ஆம் ஆண்டிற்குரிய நடவடிக்கை திட்டங்கள்

2011–12ஆம் ஆண்டில் நிறுவனம் ரூ.61.36 கோடியளவில் விற்பனை செய்து ரூ.54.79 இலட்சம் இலாபம் ஈட்டவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து தொழிற்சாலைக்குகந்த உப்பை உற்பத்தி செய்து வருகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் தமிழக அரசிடமிருந்து இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் 5,524 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளது. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் கடந்த ஆண்டுகளில் விரிவுபடுத்தப்பட்டு அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவைகளை உற்பத்தி செய்து வருகிறது. இதுவரை இந்நிறுவனம் 3,210 ஏக்கர் குத்தகை நிலப்பரப்பினை மேம்படுத்தி உப்பு உற்பத்தி செய்கின்றது. 835 பாத்திகளைக் கொண்டு ஆண்டொன்றுக்கு சுமார் 1,75,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்ய முடியும். உப்பு உற்பத்திப் பணிகளில் இந்நிறுவனம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 1,119 தொழிலாளர்களுக்கும், மேலும் 150 நபர்களுக்கு உப்பு சார்ந்த பணிகளிலும் வேலை வாய்ப்பை வழங்கி வருகிறது.

இந்நிறுவனம் தொழிற்சாலைக்குகந்த உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்புக்களைத் தயாரித்து விநியோகம் செய்வதற்கு ஐ.எஸ்.ஓ 9001:2008 தரச்சான்றிதழ் பெற்றுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள பள்ளி செல்லும் குழந்தைகள் இரும்பு மற்றும் அயோடின் குறைபாட்டினால் இரத்த சோகைக்கு ஆளாவதைக் குறைக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் மூலமாக இருவித செறிவூட்டப்பட்ட உப்பை (இரும்பு மற்றும் அயோடின்) தொடர்ந்து விநியோகித்து வருகிறது. பொதுமக்களிடம் உள்ள அயோடின் சத்து குறைபாடுகளைக் களைவதற்காக தமிழ்நாடு உப்பு நிறுவனம் போதிய அளவு அயோடின் கலந்த உப்பினை PFA Act, IS 7224:2006 தரத்திற்கு தயாரித்து மலிவு விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கத்தில் பயன்படுத்தப்படாத மீதமுள்ள 2,200 ஏக்கர் நிலத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தை ரூ.13.21 கோடி மூலதன மதிப்பீட்டில் அமல்படுத்திய பின்பு தமிழ்நாடு உப்பு நிறுவனம்

ஆண்டொன்றுக்கு சுமார் 3.5 முதல் 4 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யும். தமிழ்நாடு உப்பு நிறுவனம் இதற்கான பணிகளைத் துவக்கியுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1990–91ஆம் ஆண்டு முதல் இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம், 2001–02 முதல் 2009–10 வரையிலான நிதி ஆண்டுகளில் அரசிற்கு ரூ.1,233.82 இலட்சங்கள் வழங்கியுள்ளது.

2008–09ல் இந்நிறுவனம் சோதனை அடிப்படையில் இயந்திரங்களை உபயோகப்படுத்தி உப்பைச் சுரண்டுதல் மற்றும் வாருதல் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தது. இது தொடர்ந்து 2009–10 மற்றும் 2010–11 ஆண்டுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இவ்வேலையை இயந்திரங்களின் மூலம் செய்வதால், தொழிலாளர்கள் நீண்ட நேரம் உப்பு நீரில் வேலை செய்வதால் ஏற்படும் உடல் உபாதைகளிலிருந்து பேணிக்காக்க முடியும். மேலும் தொழிலாளர்களின் பற்றாக்குறையை தவிர்த்து அதிக அளவு உப்பு உற்பத்தியையும் பெருக்க முடியும். தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதன்முறையாக ரூ.20 இலட்சம் முதலீட்டில் இயந்திரமயமாக்கும் வேலைகளைச் சோதனை அடிப்படையில் செய்துள்ளது.



நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்திலுள்ள 12,000 ஏக்கர் நிலம் உப்பு உற்பத்தி செய்ய உகந்ததாக கண்டறியப்பட்டு, அந்த நிலத்தினை இந்நிறுவனத்திற்கு வழங்கிட அரசிடம் விண்ணப்பித்துள்ளது. இந்நிறுவனம் மேற்கூறிய நிலத்தைக் கையகப்படுத்துவதால் உப்பு உற்பத்தியைப் பெருக்கி தொழிற்சாலைகளுக்கு உகந்த உப்பை விநியோகம் செய்யவும் மற்றும் புதிய குளோர் அல்கலி தொழிற்சாலைகளை நிறுவவும் இயலும். மேலும் இந்த புதிய திட்டத்தின் மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனம் சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவி, தூள் உப்பை தயாரித்து தமிழ்நாடு மற்றும் தென் மாநிலங்களுக்கு பொது விநியோக திட்டத்தின் மூலம் மலிவு விலையில் விநியோகம் செய்ய இயலும்.

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான புதிய முதலீட்டுச் செயற்குறிப்புகளை ஈர்க்கும் நோக்குடன் 1992ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (சுருக்கமாக 'தொழில் வழிகாட்டி' என அழைக்கப்படுகிறது) என்ற அமைப்பினை தமிழக அரசு நிறுவியது.

தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:

1. பெரிய அளவிலான தொழில் திட்டங்களைத் தமிழ்நாட்டிற்கு ஈர்த்தல்;
2. பெரிய அளவிலான தொழில் திட்டங்களுக்கு அனுமதிகளைப் பெற்றுத் தருகின்ற ஒற்றை சாளர ஆவண மையமாகச் செயல்படுதல் மற்றும்
3. அசைட் (ASIDE) திட்டத்தின்கீழ் மானியம் கோரி வருகின்ற மனுக்களை ஆய்வு செய்தல்.

**ஒற்றைச் சாளர வசதி**

திட்ட அனுமதி, தீயணைப்புப் பணி அனுமதி, சுற்றுச்சூழல் அனுமதி, தொழிற்சாலைகளுக்கான



ஆய்வாளரிடம் பதிவு செய்தல், அரசு தலைமை மின்சார ஆய்வாளரிடமிருந்து பாதுகாப்பு குறித்த சான்றிதழ், கட்டிட அனுமதி போன்ற பல்வேறு அனுமதிகள் / கட்டமைப்பு ஆதரவுகளைப் பெற முதலீட்டாளர்கள் பல்வேறு அரசு அமைப்புகளை அணுக வேண்டியுள்ளது. இதனால் குறிப்பிடத்தக்க அளவு காலதாமதம் நேரிடுகிறது. நடைமுறை காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக தொழில் வழிகாட்டி நிறுவனம் ஒற்றைச் சாளர அமைப்பாக செயல்படுகிறது. இந்த அமைப்பில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரக் குழுமங்களும் ஒன்றுகூடி கொள்கை அளவிலான ஒட்டுமொத்த தடையில்லாச் சான்றிதழை வழங்குகின்றனர். கடந்த ஆண்டில், ரூ.3,233.27 கோடி மொத்த முதலீடு கொண்ட 20 தொழில் திட்டங்களுக்கு தொழில் வழிகாட்டி நிறுவனம் ஒற்றைச் சாளர வசதி அளித்தது.

**ஏற்றுமதி வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மாநிலங்களுக்கான நிதியுதவித் திட்டம் (அசைட்)**

ஏற்றுமதி வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மாநிலங்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் ஏற்றுமதி

வளர்ச்சிக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தும் செயற்குறிப்புகளை பரிசீலித்து நிதி உதவி வழங்க, மாநில அளவிலான ஏற்றுமதி வளர்ச்சிக் குழு இயங்கி வருகிறது. இக்குழுவின் கூட்ட அமைப்பு உறுப்பினராக தொழில் வழிகாட்டி நிறுவனம் செயல்படுகிறது. கடந்த ஆண்டில், சுமார் 20 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க மாநில அளவிலான ஏற்றுமதி வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்தது.



**புவியியல் மற்றும் சுரங்கத் துறை**

கனிமங்கள் முக்கியமான பல தொழிற்சாலைகளுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவதுடன் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தொழில் வளர்ச்சியிலும் கணிசமான பங்காற்றி வருகின்றன. கனிமங்கள் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக கருதப்படுவதுடன், நாட்டின் செல்வ வளமாகவும் போற்றப்படுகின்றன. மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கனிம வளங்களும் அதன் விவேகமான பயன்பாடும் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் பொருளாதாரச் செழிப்பிலும் பிரதிபலிக்கின்றன. கனிம வள ஆதாரங்கள் மீளப் பெறமுடியாததும் குறைந்து அழியும் ஆதாரமாகவும் விளங்குகின்றன. அதனால், அக்கனிமங்களை அறிவியல் பூர்வமாகவும் முறையாகவும் சட்ட ரீதியாகவும் பாதுகாத்து விவேகமாக அகழ்ந்தெடுப்பதன் வாயிலாக கணிசமான வருவாயினை ஈட்டுவது இன்றியமையாததாகும்.

கனிம ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரகத்தின் கீழ் 1957ஆம் ஆண்டில் மாநிலப் புவியியல் பிரிவு துவக்கப்பட்டது. மாநில புவியியல் பிரிவு,

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் முனைப்புடன் கனிம ஆய்வுகள் மேற்கொண்டு, சுண்ணாம்புக்கல், பாக்ஸைட், கார்னட் மணல், கிராபைட், இரும்புத்தாது, வெர்மிகுலைட், சிலிக்கா மணல், நெருப்புக்களிமண், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், ஜிப்சம், மேக்னசைட், கிரானைட் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கான கனிமப் படிவங்களை கண்டறிவதில் பெரும் பங்காற்றியுள்ளது. இதன் காரணமாக, சிமெண்ட் ஆலைகள், கண்ணாடி, செராமிக் மற்றும் இதர தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் அமைய வழிவகுத்துள்ளது. இவை தவிர, கனிமங்களை மூலப்பொருட்களாகக் கொண்ட தொழிற்சாலைகளும், கனிமங்களைச் சார்ந்த தொழிற்சாலைகளும், பல்வேறு காலகட்டங்களில் தோன்றியுள்ளன. கனிம நிர்வாகத்தினை மேம்படுத்த வேண்டிய அவசியத்தினையும் தேவையினையும் கருதி 1983ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை தனித்துறையாக உருவாக்கப்பட்டது.

**துறையின் குறிக்கோள்கள்**

1) நவீன கனிம ஆய்வு உத்திகளைக் கையாண்டு புதிய கனிம படிவங்களைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்வதைத் துரிதப்படுத்துதல்.



2) கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு, கனிம வளம் குறித்த தகவல்கள் மற்றும் விவரங்களை வழங்குதல்.

3) கனிமத் தொழிற்சாலைகளுக்கு இடையே கனிமங்களை அதிக அளவு பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்துவதற்கான போட்டி மனப்பான்மையினை ஊக்குவித்தல்.

4) மாநிலத்தில் கனிம ஆய்வு மேற்கொள்ளல்; சுரங்கப்பணிகள் நடைபெறும் பொழுதும் அதற்குப் பின்னரும், சுற்றுப்புறச்சூழல் மற்றும் பல்வேறு உயிரினப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்தல்.

5) சுரங்கப் பணிகள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான மனித வளத்தினை மேம்படுத்தி ஊக்குவித்தல்.

6) சுரங்கப் பணிகளில் பணிபுரியும் மக்களுக்கு பாதுகாப்பும் நல்வாழ்வும் அளித்தல்.

7) சட்டவிரோதமான சுரங்கப் பணிகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக கனிமங்களை எடுத்துச்செல்பவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

8) சிறந்த கனிம நிர்வாகத்தின் மூலமாக கனிம வருவாயினை அதிகரித்தல்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை பின்வரும் பணிகளைச் செய்து வருகின்றது :

1. கனிம ஆய்வு மற்றும் கனிமங்களின் மதிப்பீடு.

2. நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள்.

3. கனிம நிர்வாகம்.

**கனிம ஆய்வு**

அரசுக்குக் கணிசமான வருவாய் ஈட்டித் தந்தாலும் கனிமங்கள் தொடர்ந்து வெட்டியெடுக்கப்படுவதால் கனிம வளங்கள் குறைந்து கொண்டே வரும் சூழ்நிலை மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும். இத்தருணத்தில், கண்டறியப்படாமல் ஒதுக்கமாயுள்ள விலைமதிப்புமிக்க கனிமவளங்களை உரிய அதி நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக முழுமையாக கண்டறிந்து பயன்பாட்டிற்கு கொண்டுவர உரிய கனிம ஆய்வுகள் மேற்கொள்வது அவசியமாகின்றது. சந்தையில் கனிமங்களின் தேவை அதிகரித்துக்கொண்டு வருவதினைக் கருத்தில்கொண்டு பல்வேறு மாவட்டங்களில் கனிமவள ஆதாரங்களை



முறையாகத் திட்டமிட்டு கனிமபடிவங்களின் இருப்புகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டியது இத்தருணத்தில் அவசியமான ஒன்றாகும்.

கனிம ஆய்வுகளில் தற்போதுள்ள தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, குறைந்து வரும் கனிமங்களை ஈடுகட்டவும், பல ஆண்டுகளுக்கு முன்னர் பல்வேறு மாவட்டங்களில் கண்டறியப்பட்ட கனிம ஆதாரங்களை ஆய்வு செய்யும் நோக்கத்திலும், அரசு புதியதாக கனிம ஆய்வுப்பிரிவு ஒன்றினை இத்துறையில் ஏற்படுத்தியது. இந்த கனிம ஆய்வுப்பிரிவு, நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், ஈஸ்வரமூர்த்தி பாளையம் கிராமம் மற்றும் சேலம் மாவட்டம், சேலம் மற்றும் ஓமலூர் வட்டங்களில் சுண்ணாம்புக்கரடு பகுதி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலும் மாலிப்டினம், தங்கம் மற்றும் பிளாட்டினம் போன்ற கனிமங்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

**நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள்**

நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் நிலச்சரிவு ஊறு நிகழ வாய்ப்புள்ள

பகுதிகளைக் கண்காணிக்கவும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளவும் அரசால் புவி தொழில்நுட்ப ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள், மலைப்பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொண்டு நிலச்சரிவு ஏற்பட சாத்தியமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து புவியியல் சிறப்பு வரைபடங்கள் மற்றும் மண்டல வரைபடங்கள் தயாரித்துள்ளன. புவி தொழில்நுட்ப மையங்களானது மாவட்ட நிர்வாகத்திற்கு நிலச்சரிவு அழிவுகளை தடுக்கும் மேலாண் பணிகளுக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன. மேலும், நிலச்சரிவினால் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் பொது மக்களின் உடைமைகள் மற்றும் உயிரைப் பாதுகாக்கும் வகையில் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக தொழில்நுட்பக் கருத்துக்களை அளித்து வருகின்றன.

புவி தொழில்நுட்ப மையங்கள், மலைப்பகுதிகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கும் பகுதிகளை நிலச்சரிவு பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் ஆய்வுகள் மேற்கொண்டு கட்டுமானப்



பணிகளுக்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் வழங்கி வருகின்றன.

**கனிம நிர்வாகம்**

சிறு கனிமம் மற்றும் பெருங்கனிமங்களுக்கான கனிமச் சலுகைகளை உரிய சட்டங்கள் மற்றும் விதிகளின்படி வழங்குவது கனிம நிர்வாகத்தில் அடங்கும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பாதிக்காத வண்ணம் அறிவியல் பூர்வமான முறையில் கனிமங்களை அகழ்ந்தெடுத்தலை உறுதிசெய்தல், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் கனிம மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல், சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கடத்துதலைத் தடுத்தல், உரிமக்கட்டணம், ராயல்டி மற்றும் இதர தொகைகளை வசூலித்தல் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் கனிம வருவாயினை உயர்த்துதல் போன்ற கனிம நிர்வாகப் பணிகளை இத்துறை செய்து வருகின்றது.

செம்மையான கனிம நிர்வாகத்திற்காக இத்துறையில் ஒரு துணை இயக்குநர் அல்லது உதவி

இயக்குநர் தலைமையில் மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அலுவலகங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடி நிர்வாக கட்டுப்பாட்டின் கீழும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் / இயக்குநரின் ஒட்டு மொத்த கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

கனிமச் சலுகைகள் வழங்குதல் தொடர்பாக பின்பற்றப்படும் பல்வேறு சட்டங்களும் விதிகளும் கீழே தரப்பட்டுள்ளன:-

(1) 1952ஆம் ஆண்டு சுரங்கச்சட்டம்

(2) 1955ஆம் ஆண்டு சுரங்க விதிகள்

(3) 1957ஆம் ஆண்டு சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம்

(4) 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகள்

(5) 1960ஆம் ஆண்டு கனிம சலுகை விதிகள்

(6) 1961ஆம் ஆண்டு உலோகம் சார்ந்த சுரங்கங்களை முறைப்படுத்துதல் விதிகள்

(7) 1980ஆம் ஆண்டு வனங்கள் பாதுகாப்பு சட்டம்

(8) 1981ஆம் ஆண்டு வனப் பாதுகாப்பு விதிகள்



(9) 1988ஆம் ஆண்டு கனிமப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துதல் விதிகள்

(10) 1999ஆம் ஆண்டு கிரானைட் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துதல் விதிகள்

**கனிம வருவாய்**

கனிம மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்ட செம்மையான மற்றும் முனைப்பான நடவடிக்கையின் பலனாய் மாநிலத்தின் கனிம வருவாய் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வந்துள்ளது. அரசுக்கு கிடைக்கும் கனிம வருவாயில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கும் வகையில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை சீரிய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. 1983–84ஆம் ஆண்டில் ரூ.2.83 கோடியாக இருந்த கனிம வருவாய் தற்போது ரூ.670.57 கோடியாக பன்மடங்கு உயர்ந்துள்ளது. இது இத்துறை மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு நற்சான்றாக அமைந்துள்ளது.

**மின்னணு ஆளுமை**

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தின் புலப்படங்களை கணினி மூலம் பதிவு செய்து புவி தொலைத்தகவல் அமைப்புடன் கூடிய சுரங்கக் குத்தகை தகவல்

பதிவேட்டில் பதியும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. இப்பணி சுரங்கம் நடைபெறும் பகுதிகளையும், சட்டவிரோதமாக கனிமங்கள் வெட்டியெடுத்தலையும் கண்டறிய உதவி புரியும்.



## சர்க்கரைத் துறை

### சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டில் ஊரக விவசாயிகளின் பொருளாதார நிலையைச் சர்க்கரைத் தொழில் மேம்படுத்துகிறது. நாட்டிலேயே பெருமளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 7 விழுக்காடு ஆகும். கரும்பு பயிரிடுதல், அறுவடை செய்தல், போக்குவரத்து மற்றும் இதர பணிகள் வாயிலாக இலட்சக்கணக்கான ஊரகப் பகுதி மக்களுக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளைச் சர்க்கரை ஆலைகள் உருவாக்குகின்றன.

### செயலாக்கம்

தமிழ்நாட்டில் 47 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 16 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 3 சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலும், 28 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. தற்போது 44 சர்க்கரை ஆலைகள் செயல்பாட்டில் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும்,

2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும், 26 தனியார் சர்க்கரை ஆலைகளும் அடங்கும்.

**உற்பத்தி**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் நடப்பு அரைவைப் பருவத்தில், 178.59 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்து 16.39 இலட்சம் டன்கள் சர்க்கரையை, சராசரி 9.18 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானத்துடன் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**சர்க்கரை விற்பனை**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் மொத்தச் சர்க்கரையையும் விற்பனை செய்யும் ஒருங்கிணைப்பு முகவராக, தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் செயல்படுகிறது. நடப்பு சர்க்கரை ஆண்டில், இந்திய அரசு 90 விழுக்காடு சர்க்கரையை வெளிச்சந்தையிலும், எஞ்சிய 10 விழுக்காட்டினைக் கட்டுப்படுத்தப்பட்ட விற்பனையிலும் விற்பனை செய்ய அனுமதித்துள்ளது.



**உடன்விளை பொருட்கள்**

**(i) கரும்புச் சக்கை**

சர்க்கரை ஆலைகள் தங்கள் உடன்விளை பொருளான கரும்புச் சக்கையை நீராவி உற்பத்தி செய்ய எரிபொருளாக பயன்படுத்துகின்றன. எஞ்சிய கரும்புச் சக்கையைப் பிற நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக விற்பனை செய்கின்றன.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கடந்த நிதியாண்டில், 33,974 மெட்ரிக் டன்கள் கரும்புச் சக்கையை விற்பனை செய்து, ரூ.508.02 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளன.

**(ii) கரும்புக்கசண்டு**

சர்க்கரை ஆலைகளின் உடன்விளை பொருட்களில் கரும்புக்கசண்டும் ஒன்றாகும். இந்தக் கசண்டு, எரிசாராய உற்பத்தி, பிற வேதிப் பொருட்கள் உற்பத்தி மற்றும் கால்நடைத் தீவனத் தயாரிப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்தும், கடந்த நிதியாண்டில் 1.28 இலட்சம் டன் கசண்டு உற்பத்தி செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்பனை

செய்யப்பட்டு, ரூ.3,323.24 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**(iii) ஆலைக் கழிவு மண்**

சர்க்கரை ஆலைகளில் உடன்விளைப் பொருட்களில் ஒன்று ஆலைக்கழிவு மண். ஆலைக் கழிவு மண்ணை பயன்படுத்தி உயிர் உரமான மண்புழு உரம் சர்க்கரை ஆலைகளில் தயாரிக்கப்படுகிறது. சில ஆலைகள், நுண்ணுயிரிகளையும், நுண் ஊட்டச் சத்துக்களையும் சேர்த்து செழிப்பூட்டிய ஆலைக் கழிவு மண்ணைத் தயாரிக்கின்றன. உற்பத்தியாகும் முழு அளவும், அந்தந்த ஆலைகளின் கரும்பு சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**இணை மின் உற்பத்தி**

தமிழ்நாட்டில் தற்போது மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தலா 7.50 மெகாவாட் மின்சாரமும், சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 5.00 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது.



இவ்வாலைகள் தங்கள் உற்பத்தியை அரசுத் தொகுப்பிற்கு அளிக்கின்றன. 12 சர்க்கரை ஆலைகளில் (கூட்டுறவுத் துறை 10 மற்றும் பொதுத்துறை 2) மொத்தம் 183 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்களை மொத்தம் ரூ.964.88 கோடி செலவில் அமைத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த 12 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணைமின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும்போதே ஆலைகளும் ரூ.276.27 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட உள்ளன. இதன் வாயிலாக சர்க்கரை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரம் மற்றும் நீராவியின் அளவை குறைப்பதுடன் அரசுத் தொகுப்பிற்கு கூடுதலாக மின்சாரம் வழங்கவும் ஏதுவாகும்.

**வடிப்பகம்**

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கடந்த நிதியாண்டில், 186.43 இலட்சம் லிட்டர் எரிசாராயத்தை உற்பத்தி செய்து முந்தைய இருப்புடன் சேர்த்து மொத்தம் 212.66 இலட்சம் லிட்டர் விற்பனை செய்து, ரூ.5,877.26 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளன.

**எத்தனால்**

ஓராண்டிற்கு மாநிலத்திற்கு 5 சதவிகித எத்தனால் கலந்த பெட்ரோலை விநியோகிக்கத் தேவைப்படும் எத்தனாலின் அளவு 6.25 கோடி லிட்டர்கள் ஆகும். தமிழ்நாட்டில் இதுவரை ஆண்டுக்கு சுமார் 9.60 கோடி லிட்டர்கள் உற்பத்தித் திறன் கொண்ட எட்டு எத்தனால் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் நாளொன்றுக்கு 30 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட 2 எத்தனால் உற்பத்தி நிலையங்கள் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 45 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் உற்பத்தி நிலையம், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஒவ்வொன்றும் ரூ.36 கோடி செலவில் நிறுவுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் புனரமைத்தல்**

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை புனரமைக்கப்பட்டு, சோதனை ஓட்டத்தின் போது 18,240



மெட்ரிக் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டு, 27.04.2011 அன்று சோதனை ஓட்டம் முடிவு பெற்றது.

இந்த அரசு கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் பொதுவான செயலாக்கம் மற்றும் கரும்பு சாகுபடியாளர்களின் நலன் ஆகியவற்றை மேம்படுத்திடவும், நாட்டிலேயே மிகச் சிறந்த தகுதியை அடையவும் முயற்சிகள் மேற்கொள்ளும். மேலும், நலிவுற்ற சர்க்கரை ஆலைகள், புனரமைப்புடன் நவீனமய விரிவாக்கம் செய்யப்பட்டு அதிகச் சர்க்கரை மற்றும் எத்தனால் உற்பத்தி செய்ய வழிவகுக்கப்படும்.

**எஸ்.பி. வேலுமணி**
தொழில் துறை அமைச்சர்